செ.வெ.எண் - 58 நாள்: 27.01.2020

# அரியலூர் மாவட்டத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், **"மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்"** மாவட்ட ஆட்சித்தலைவர் மாவட்ட வருவாய் அலுவலர் **திருமதி.கா.பொற்கொடி** அவர்கள் தலைமையில் இன்று **(27.01.2020)** நடைபெற்றது.

பின்னர், இக்கூட்டத்தில், பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய **368** மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டு, இம்மனுக்கள் மீது சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது.

மாற்றுத்திறனாளிகள் வரிசையில் காத்திருக்காமல், அவர்களுக்கான தனி இருக்கையில் அமர்ந்திருந்த மாற்றுத்திறனாளிகளிடம் **17** கோரிக்கை மனுக்களை பெற்று இம்மனுக்களின் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டது.

பின்னர், ஒருங்கிணைந்த பள்ளி கல்வித்துறையின் சார்பில் அரியலூர் ஒன்றயத்தைச் சேர்ந்த 11 குழந்தைகளுக்கு 14 உபகரணங்களும், திருமானூர் ஒன்றியத்தைச் சேர்ந்த 21 குழந்தைகளுக்கு 27 உபகரணங்களும், செந்துறை ஒன்றியத்தைச் சேர்ந்த 20 குழந்தைகளுக்கு 25 உபகரணங்களும், ஆண்டிமடம் ஒன்றியத்தைச் சேர்ந்த 17 குழந்தைகளுக்கு 23 உபகரணங்களும், ஆக மொத்தம் 69 குழந்தைகளுக்கு 89 உபகரணங்களாக மூன்று சக்கர சைக்கிள், சக்கர நாற்காலி, சிறப்பு சக்கர நாற்காலி (CP Chair), நடைபயிற்சி சாதனம் (Rolator), மனவளர்ச்சிக் குன்றிய குழந்தைகளுக்கான கற்றல்-கற்பித்தல் உபகரணம் (MISED Kit), பார்வையற்ற குழந்தைகளுக்கான கற்றல்-கற்பித்தல் உபகரணம் (Braille Kit) மற்றும் முடநீக்கியல் சாதனங்கள் ரூ.3,19,763/- மதிப்பீட்டிலும் என ஆகமொத்தம் பிறப்பு முதல் 18 வயது வரையுள்ள **69 மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு ரூ.3 இலட்சத்து 19 ஆயிரத்து 763** மதிப்பீட்டில் அலிம்கோ உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பொன்னி, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி புள்ளியியல் அலுவலர் க.பால்பாண்டி, மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பெ.பாரதிதாசன், வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் சிவசங்கரன், அமுதா மற்றும் சிறப்பு பயிற்றுநர்கள், இயன்முறை பயிற்சியாளர்கள், அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**